# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

நான்காவது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு. வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை 600 032
மின்னஞ்சல் tnerc@nic.in இணையத் தளம் www.tnerc.gov.in


## பொது அறிவிப்பு

**நாள் 05,08,2022**

## தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழக நிறுவனம் (TANGEDCO) தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழக நிறுவனம் (TANTRANSCO) மற்றும் மாநில மின் சுமைப் பகுப்பு மையம் (SLDC) தாக்கல் செய்துள்ள மின்கட்டண மனுக்கள் மீதான பொது மக்களின் கருத்துக் கேட்புக் கூட்டம்

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழக நிறுவனம் (TANGEDCO) 2016-17 முதல் 2020-21 வரையிலான நிதியாண்டுகளுக்கான இறுதி உண்மை நிலை சரிபார்ப்பு, 2021-22 நிதியாண்டுக்கான வருடாந்திர செயல் திறன் மதிப்பாய்வு மற்றும் 2022-23 முதல் 2026-27 நிதியாண்டு வரைக்கான மொத்த வருவாய் தேவையை நிர்ணயித்தல் மற்றும் பல்லாண்டு மின்கட்டண விகித திட்டத்தின்படி நிதியாண்டுகள் 2022-23 முதல் 2026-27 வரைக்கான மின்கட்டணத்தை நிர்ணயம் செய்யும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்ட மனுவை 19.07.2022 அன்று மின்கட்டண வீத மனு எண்.1/2022 ஆக ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2. தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழக நிறுவனம் (TANTRANSCO) 2016-17 முதல் 2019-20 வரையிலான நிதியாண்டுகளுக்கான உண்மை நிலை சரிபார்ப்பு மற்றும் 2020-21 நிதியாண்டிற்கான தற்காலிக உண்மை நிலை சரிபார்ப்பு மற்றும் 2021-22 நிதியாண்டிற்கான வருடாந்திர செயல் திறன் மதிப்பாய்வு மற்றும் 2022-23 முதல் 2026-27 நிதியாண்டு வரைக்கான மொத்த வருவாய் தேவையோடு சேர்த்து பல்லாண்டு மின் கட்டண விகிதத் திட்டத்தின்படி மின்செலுத்துதல் கட்டணங்கள் மற்றும் பிற தொடர்புடைய கட்டணங்களையும் நிர்ணயிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனுவை 19.07.2022 அன்று மின் கட்டண வீத மனு எண்.2/2022 ஆக ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3. மாநில மின்சுமை பகுப்பு மையமும் (SLDC), 2017-18 முதல் 2019-20 நிதியாண்டுகள் வரையிலான உண்மை நிலை சரிபார்ப்பு மற்றும் 2020-21 நிதியாண்டிற்கான தற்காலிக உண்மை நிலை சரிபார்ப்பு மற்றும் 2021-22 நிதியாண்டிற்கான வருடாந்திர செயல்திறன் மதிப்பாய்வு மற்றும் 2022-23 முதல் 2026-27 வரையிலான மொத்த வருவாய்த் தேவை மற்றும் பல்லாண்டு மின்கட்டண விகிதத் திட்டத்தின்படி நிதியாண்டுகள் 2022-23 முதல் 2026-27 வரையிலான மாநில மின்சுமை பகுப்பு மையக் கட்டணங்களை நிர்ணயம் செய்யும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் உறுதி மொழி ஆவணத்தை 19.07.2022 அன்று மின்கட்டண வீத மனு எண்.1/2020ல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4,தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழகம், 2022-23 முதல் 2026-27 நிதியாண்டு வரையிலான மின்கட்டணம் அல்லாத இதர கட்டணங்களை நிர்ணயம் செய்து 01.09.2022 லிருந்து நடைமுறைக்கு வரும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்ட மனுவை 19.07.2022 அன்று இதர மனு எண்.36/2022 ஆக ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

5. ஆணையம் தனது 19.7.2022 நாளிட்ட ஆணையில், மின்கட்டண வீத மனுவின் நகல்களை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழகம் மற்றும் ஆணையத்தின் வலைதளங்களில் பதிவேற்றம் செய்யும்படி பணித்தது. மேலும், இந்த முன் மொழிவின் மீதான தொடர்புடையவர்களின் கருத்துரைக்காக முப்பது நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டது. அனைத்து கருத்துரைகளும் அதற்கான தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் / தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் / மாநில மின் சுமை பகுப்பு மையம் ஆகியவற்றின் பதிலுரைகளுடன் ஆணையத்திற்கு 22 ஆகஸ்ட் 2022 அன்று அல்லது அதற்கு முன்போ அனுப்பப்படுதல் வேண்டும்.

6. அவ்வாறாக, மனுக்களின் நகல்கள் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மாகக் கழகத்தின் வலைதளமான www.tangedco.gov.in, தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் வலைதளமான www.tantransco.gov.in , மாநில மின்சுமை பகுப்பு மையத்தின் வலைதளமான www.tnebldc.org மற்றும் ஆணையத்தின் வலைதளமான www.tnerc.gov.in ஆகியவற்றில் பதிவேற்றம் செய்யப்பட்டன.

7, இதன் தொடர்ச்சியாக ஆணையம், கீழ்க்கண்ட அட்டவணையின்படி பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கான செயல்முறைத் திட்டத்தை அறிவிக்கிறது. விருப்பமுள்ளவர்கள், தங்களுக்கு அருகிலுள்ள இடத்தில் பின்வரும் நாட்களில் ஆணையத்தின் முன் ஆஜராகி தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம். கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறும் நாட்களில் அந்தந்த இடங்களில் காலை 9.00 மணி முதல் காலை 10.30 மணி வரை தங்களுடைய பெயர்களை பதிவு செய்பவர்கள் கூட்டத்தில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

| தேதி மற்றும் நாள் | இடம் | நிகழ்விடம் | நேரம் |
|---|---|---|---|
| ஆகஸ்டு 16, 2022 (செவ்வாய் கிழமை) | கோயம்புத்தூர் | எஸ்.என்.ஆர். கல்லூரி கலையரங்கம்,<br>நவ இந்தியா பேருந்து நிறுத்தம்,<br>அவிநாசி சாலை,<br>கோயம்புத்தூர் 641 006. | முற்பகல் 10.00 மணி முதல் |
| ஆகஸ்டு 18, 2022 (வியாழக் கிழமை | மதுரை | லட்சுமி சுந்தரம் மண்டபம்,<br>தல்லாக்குளம்,<br>மதுரை 625 002. | முற்பகல் 10.00 மணி முதல் |
| ஆகஸ்டு 22, 2022 (திங்கட் கிழமை | சென்னை | கலைவாணர் அரங்கம்,<br>சென்னை 600 005. | முற்பகல் 10.00 மணி முதல் |

செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்